இலங்கை திறந்த பல்கலைக் கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டத் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 4

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II – 2022/2023

LLU4805/LWU2311– ஒப்பந்தச் சட்டம்

நேரம் : 1 மணித்தியாலம்

216

---

திகதி: 02.12.2023 காலம்: மு.ப. 09.30 – மு.ப 10.30

ஒரு வினாவிற்கு மட்டும் விடையளிக்க.

தெளிவற்ற கையெழுத்திற்கு பரீட்சாத்திகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. (அ). நன்கு அறியப்பட்ட துணி விநியோகத்தரான பினெக்ஸ், வரவிருக்கும் கிருஸ்துமஸ் பருவத்திற்காக, தனது 1500 மீட்டர் 100% பருத்தித் துணிகளை விற்பனை செய்வதற்காக ஆடை உற்பத்தியாளரான நிஷியுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தார். பினெக்ஸ் முதல் தொகுதித் துணிகளை ஒக்டோபர் 2023 க்குள் அனுப்பவும், இரண்டாவது தொகுதியினை நவம்பர் 2023 க்குள் அனுப்பவும் ஒப்புக் கொண்டார். பினெக்ஸ் ஒப்புக் கொண்டதன் படி முதல் தொகுதித் துணிகளை அனுப்பினார், ஆனால் இரண்டாவது தொகுதியின் விலையில் 10% அதிகரிப்பைக் கோரினார். நிஷி கூடுதல் தொகையை செலுத்த மறுத்த போது, பினெக்ஸ் அதிகரிக்கப்பட்ட தொகைக்கு நிஷி உடன்படாவிட்டால் தாம் இரண்டாவது தொகுதித் துணிகளை அனுப்ப மாட்டோம் எனக் கூறினார். நிஷி வாடிக்கையாளர் ஒருவருக்கு 2000 பருத்தி சட்டைகளை டிசெம்பரில் வழங்குவதற்கான உத்தரவு ஒன்றினை ஏற்கெனவே எடுத்திருந்தார். எனவே, அதிகரிக்கப்பட்ட விலைக்கு இரண்டாவது தொகுதித் துணிகளை வாங்குவதற்கு உடன்பட்டதுடன், அதிகரிக்கப்பட்ட விலையினை செலுத்துவதற்கான எழுதப்பட்ட ஒரு உடன்படிக்கைக்குள் நுழைந்தார்.

   நிஷிக்கு பினெக்ஸிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். நிஸியினால் இரண்டாவது தொகுதித் துணிகளுக்காக எழுதப்பட்ட உடன்படிக்கையின் வலிதான் தன்மையினை சவாலுக்குட்படுத்த முடியுமா என்பதை பகுப்பாய்வு செய்க. (10 புள்ளிகள்)

   (ஆ). முறையற்ற செல்வாக்குக் காரணமாக முடியுறுத்தப்படக் கூடிய ஒப்பந்தமானது இரண்டு வெவ்வேறு வகைகளுள் அடங்கும். இவ் வகைப்பாட்டின் அடிப்படையினை விளக்குக. உமது விடையினை எடுத்துக் காட்டுவதற்கு தீர்ப்புச் சட்டத்தினைப் பயன்படுத்துக. (10 புள்ளிகள்)

2. கட்சிக்காரர்கள் ஒரு பொதுவான அனுமானத்தின் அடிப்படையில் ஒரு ஒப்பந்தத்தினுள் நுழைந்து, பின்னர் அது பிழையானது எனக் கண்டறிந்தால், பொதுப் பிழை என்ற அடிப்படையின் மீது அவ் ஒப்பந்தத்தினை நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்யலாம்.

   ஆங்கிலச் சட்டம் மற்றும் உரோமன் டச்சுச் சட்டங்களின் கீழ் மேலுள்ள கூற்றின் வலிதான் தன்மையினை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்க. இயைபான தீர்ப்புச் சட்டத்தினைக் கொண்டு உமது விடையினை ஆதாரப்படுத்துக.

   (20 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது.*